

# ஃபோட்டோ ஸ்டிச்

*துணில ஏதாவது இமேஜ ரெப்ளிகேட் பண்ணனும் நீங்க விரும்பினா, இந்த டுடோரியல் உங்களுக்கானதுதான்.*





தேவைப்படும் பொருள்கள்

ஒரு லேப்டாப் அல்லது பிசி
ஆர்ட்டிஸ்டிக் டிஜிட்டரைசர் சாஃப்ட் வேர் ஃபுல் வெர்ஷன்
ஹூப்-ஐவிட 2 அங்குலம் பெரிய பிளைய்ன் துணி
பேப்பர் ஃப்யூசிங்
நீங்க ரெப்ளிகேட் செய்ய விரும்பும் இமேஜ்
Re20a ஹூப்
பட்டு நூல்





உஷா ஜானோம் மெமரி கிராஃப்ட் ஸ்கைலைன் எஸ் 9 தையல் மிஷினை அதன் முழு திறனோட பயன்படுத்த, உங்களுக்கு ஆர்டிஸ்டிக் டிஜிட்டைசர் சாஃப்ட்வேர் ஃபுல் வெர்ஷன் இன்ஸ்டால் செய்யப்பட்ட பிசி அல்லது லேப்டாப் தேவைப்படும். -சாஃப்ட்வேர் எப்படி வாங்கறது, அதை எப்படி இன்ஸ்டால் செய்யறதுங்கறதை பத்தின பற்றிய கூடுதல் விவரங்களுக்கு www.ushasew.comங்கற வெப்சைட்ல லாக் ஆன் பண்ணுங்க.





ஆர்டிஸ்டிக் டிஜிட்டைசர் சாஃப்ட்வேர லேப்டாப்-ல ரன் பண்ணுங்க. கிரியேட் நியு ஐகான்-அ கிளிக் பண்ணுங்க. மொத்த ஹூப்-ஐ பாக்க ஜூம் அவுட் பண்ணுங்க. டூல் பார்ல மிஷின் பெயரை கிளிக் பண்ணுங்க. எல்லா மிஷின் பெயர்கள் அப்புறம் பொருத்தமான ஹூப் அளவுகளோட ஒரு பாப் அப் அப்பியர் ஆகும். இந்த பிராஜக்டுக்கு நாங்க உஷா ஜானோம் மெமரி கிராஃப்ட் ஸ்கைலைன் எஸ் 9 தையல் மிஷினை யூஸ் பண்றோம். இதையே நீங்க ட்ராப் டவுன் மெனுலேருந்து செலக்ட் பண்ணிக்கங்க. நாங்க இதுல யூஸ் பண்ணப்போற ஹூப் Re20a 170மிமீ x 200 மிமீ. இதை ஏற்கெனவே செலக்ட் பண்ணியாச்சு.






ஓபன் அன்ட் செலக்ட்-அ கிளிக் பண்ணி நீங்க ரெப்ளிகேட் செய்ய விரும்பற இமேஜ தேர்ந்தெடுங்க. அந்த இமேஜ் ஹை ரெசல்யூஷன் கொண்டதா இருக்கறதை உறுதி செய்துக்கங்க. ஓபன்-அ கிளிக் பண்ணுங்க. இமேஜ் லோட் பல்வேறு ஆப்ஷன்சோட பாப் அப் ஓபன் ஆகும் அதுலேயிருந்து நீங்க செலக்ட் பண்ணிக்கலாம். இதுல காட்டி இருக்க மாதிரி இமேஜ கிராப்பிங் செய்து அட்ஜஸ் பண்ணிக்கலாம். இந்த ஃபோட்டோ பேக்ட்ராப், கிராஸ் ஸ்டிச், ஃபோட்டோ ஸ்டிச் அல்லது பெயின்ட் ஸ்டிச்-னு எப்படி வேணாலும் ஓபன் பண்ணிக்கலாம், நாம இந்த பிராஜக்ட்டுக்கு ஃபோட்டோ ஸ்டிச்-அ செலக்ட் பண்ணிக்கலாம். இப்ப ஓகே-வ பிரஸ் பண்ணுங்க.







முதல்ல நம்ம காமா கரெக்க்ஷனை 1 முதல் 0.8 வரை அட்ஜஸ்ட் பண்ணக்கலாம். இது தையலுக்கு கொஞ்சம் டெப்த் கொடுக்கும். நம்ப விருப்பத்திற்கு ஏற்ப ஸ்டிச் டென்சிட்டி அப்புறம் தையல் அகலத்தையும் அட்ஜஸ்ட் பண்ணிக்கலாம்.







நம்ம இமேஜ்க்கு ஒரு பார்டர் கொடுக்கப் போறோம். இதுக்கு இமேஜ்-ன் எட்ஜ்ல கிளிக் பண்ணி வலது பக்கம் உள்ள பிராப்பர்ட்டீஸ்க்கு அடியில அவுட்லைன் டேப்-அ செலக்ட் பண்ணனும். இது முடிஞ்சதும், சாடின் சீரியலை செலக்ட் பண்ணி அவுட்லைன் அகலத்தை 1.00 மி.மீ.க்கு அட்ஜஸ்ட் செய்துக்கங்க. இப்ப இமேஜ்ல 1.00 மி.மீ. பார்டர் இருக்கறதை நீங்க பாக்கலாம். ஒரு பார்டர் அவுட்லைன் போட்ருலாம். பார்டர்-அ கிளிக் பண்ணி அவுட்லைன் அகலத்தை 3.00 மி.மீ.க்கு அட்ஜஸ்ட் செய்துக்கங்க. அவ்ளோதான்! நம்ப கிரியேஷனை உஷா ஜானோம் மெமரி கிராஃப்ட் ஸ்கைலைன் எஸ் 9 தையல் மிஷினுக்கு அனுப்பிரலாம். இந்த மிஷின் ஒய்ஃபை சான்றிதழ் பெற்றது.







மிஷின் எம்பிராய்டரி மோட்-ல செட் ஆகி இருக்கறத உறுதிசெய்துக்கங்க. தையல் மிஷின்ல செட்டிங் ஐகானை கிளிக் பண்ணுங்க. ஒய்-ஃபை டேப்-ஐ செலக்ட் பண்ணிக்கொங்க ஒய்-ஃபை ஆன் ஆகியிருக்கறத உறுதி செய்துக்கங்க. ஸ்கிரீன் அடியில செட்டிங்ஸ கிளிக் பண்ணுங்க. அப்புறம் சர்ச்-அ கிளிக் பண்ணுங்க. அவைலபிளா உள்ள எல்லா ஒய்-ஃபை இணைப்பையும் அதுல நீங்க பாக்கலாம். உங்களுக்கு வேணுங்கற ஒய்-ஃபை இணைப்பை செலக்ட் பண்ணி ஒய்-ஃபை கீ-ய இன்சர்ட பண்ணுங்க. செய்து முடிச்சதும் ஓகே-வ செலக்ட் பண்ணுங்க, இப்ப உங்க மிஷின் ஒய்-ஃபை-ல கனெக்ட் ஆகியிருக்கும்.




இப்ப கம்ப்யூட்டருக்கு போகலாம்.

ஸ்கைலைன் எஸ் 9 அப்றம் ட்ராப்டவுன் மெனுவிலிருந்து கிளிக் பண்ணுங்க. ஒய்-ஃபை மூலம் செலக்ட் பண்ணுங்க. பில்ட்-இன் ஃபோல்டர், அதைத் தொடர்ந்து இ.எம்.பி.எஃப். ஃபோல்டர செலக்ட் பண்ணி சென்ட்-அ கிளிக் பண்ணுங்க. இந்த இமேஜ் இப்ப மிஷினுக்கு அனுப்பப்பட்டிருக்கும் இப்ப லாப்டாப்-அ ஒரு பக்கமா வைச்சிட்டு, ஹூப் வேலைய பாக்கலாம்.







Re20a எம்பிராய்டரி ஹூப்-அ எடுத்துகிட்டு, அதை அன்லாக் பண்ணி இன்னர் ஹூப்-அ நீக்கிறணும். நேரத்தை மிச்சப்படுத்த நாங்க யூஸ் பண்ற துணிய ப்ரீ-ஃப்யூஸ் பண்ணியிருக்கோம். இப்ப அவுட்டர் ஹூப் மேல துணிய வையுங்க, அதைத் தொடர்ந்து இன்னர் ஹூப்-லயும் வையுங்க. துணிய ஸ்ட்ரெச் பண்ண மறக்காதீங்க அப்பதான் கிரீசஸ் இல்லாம ஃபோட்டோ சரியா வரும். ஹூப்-அ லாக் பண்ணி மேற்கொண்டு வீடியோல காட்டியிருக்க மாதிரி அதை மேக்னடிக் கிளாம்ப்ஸ வெச்சு சரியான இடத்தில பொருத்துங்க






ஹூப்-அ மிஷின்ல வைச்சு சரியான இடத்தில லாக் பண்ணுங்க. டிஸ்ப்ளேல உள்ள ஃபோல்டர் ஐகானை செலக்ட் பண்ணுங்க. நீங்க இன்-பில்ட் டிசைன் டேப்-ல உள்ளதை உறுதிசெய்துக்கொங்க அம்புக்குறிய கிளிக் பண்ணுங்க இப்ப நீங்க சேவ் பண்ணின டிசைன உங்களால பாக்க முடியும். அதை செலக்ட் பண்ணுங்க. ஹூப் சைஸ கன்ஃபார்ம் பண்ண ஒரு பாப்-அப் அப்பியர் ஆகும். அதை கன்ஃபார்ம் பண்ண கிளிக் பண்ணுங்க.





















இப்ப டிஸ்ப்ளேவ புரிஞ்சுக்கலாம்.

1. ஹூப் சைஸ்
2. எம்பிராய்டரியோட அளவு
3. மிஷினோட வேகம்

4. இந்த பிராஜக்ட்டுக்கு மிஷின் ரெகமன்ட் பண்ணின நூல் கலர்ஸ் இங்க காட்டப்பட்ருக்கு. இதுல குறிப்பிட்டிருக்க மாதிரி நாம அஞ்சு கலர்ஸ யூஸ் பண்ணுவோம், இந்த ஒட்டுமொத்த பிராஸசுக்கும் 66 நிமிஷம் ஆகும்னு இதுல காட்டியிருக்கு.

ஃபோட்டோ ஸ்டிச்சுக்கு நமக்குத் தேவையான எல்லா கலர்சும் இங்க இருக்கு. முதல்ல கலரோட தொடங்கலாம், இது பிங்க் கலர் நூல். மிஷினை லாக் பண்ணுங்க. இதுல காட்டியிருக்க மாதிரி மிஷினை த்ரெட் பண்ணுங்க. முடிச்சதும், மிஷினை அன்லாக் பண்ணுங்க.

ஸ்டார்ட்-அ பிரஸ் பண்ணுங்க, மிஷின் அதன் மேஜிக்-அ தொடங்கிரும். உஷா ஜானோம் மெமரி கிராஃப்ட் மிஷின்கள் அழகான டிசைன்ஸ உருவாக்க உதவும் அதுவும் ரொம்ப சுலபமா. மிஷின் டிஸ்ப்ளேவ பார்த்து தையலோட புரோகிரஸ நாம பார்த்துக்கலாம். முதல் செட் தையல் முடிஞ்சமும், மிஷின் தானாவே நின்னுரும். அடுத்த கலர் ஸ்கிரீன்ல டிஸ்ப்ளே ஆகும். மிஷினை, நீல கலர்ல ரீ-த்ரெட் பண்ணிட்டு மறுபடியும் ஸ்டார்ட்-அ பிரஸ் பண்ணிட்டு ஜாலியா ரிலாக்ஸ் பண்ணிக்கங்க. டிஸ்ப்ளேபடி தொடர்ந்து நூல்களை பாத்திட்டே இதே பிராசஸ தொடருங்க.

போட்டோ ஸ்டிச்சில கடைசி நூல் கருப்பா இருக்கும். நாம அதே நூலை சாஃப்ட்வேர்ல செலக்ட் பண்ணின வெளிப்புற பார்டரை உருவாக்க யூஸ் பண்ணுவோம். ஸ்டார்ட்-அ பிரஸ் பண்ணுங்க, மிஷின் இப்ப பார்டரை கிரியேட் பண்ணும்.

அவ்வளவுதான் முடிஞ்சிருச்சு. இது ரொம்ப அற்புதமா இருக்குல்ல? இது நிச்சயமா உங்க கிஃப்ட் மற்றவங்களோடதுலேந்து தனித்து காட்டும். ஆர்ட்டிஸ்டிக் டிஜிட்டரைசர் சாஃப்ட்வேர் ஸ்கைலைன் எஸ் 9 ஃபுல் வெர்ஷன் இருந்தா, வானமே எல்லை தொழில்முறை பாணி எம்பிராய்டரி எப்பவுமே இவ்வளவு ஈசியா இருந்ததேயில்லை!